| Headline | TNB's smart meter | | |
| --- | --- | --- | --- |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 06 Jan 2020 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 3 |
| ArticleSize | 132 cm² | Journalist | NULL |
| PR Value | RM 2,304 | | |
| | | | |



# டி.என்.பி.யின் விவேக மீட்டர்!



மலாக்கா, ஜன.6- டி.என்.பி. எனப்படும் தெனாகா நேஷனல் பெர்ஹாட் நிறுவனத்தின் விவேக மீட்டர் பற்றி கூடுதல் தகவலைத் தெரிந்து கொள்வதற்காக மலாக்காவிலுள்ள தெனாகா நேஷனல் பெர்ஹாட் நிறுவனத்தின் அலுவலகத்தை பொதுமக்கள் நேற்று முற்றுகையிட்டனர்.

பழைய மீட்டருக்குப் பதிலாக புதிய மீட்டர் பொருத்தப் பட்டது குறித்து விளக்கம் பெறும் அதேவேளையில், புதிய மீட்டரினால் மின் கட்டணம் அதிகரித்துள்ளது குறித்து கூடுதல் விளக்கம் பெறுவதற்கும் பொதுமக்கள் அங்கு திரண்டு நின்றனர்.

புதிய மீட்டரினால் 30 நிமிடங்களுக்கு மின்சாரத்தை சேமிப்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டதாக பத்து பெராண்டாமைச் சேர்ந்த ஸைஹா அகமட் (வயது 50) கூறினார். மைடிஎன்பி வழி கைப்பேசியின் மூலம் மின்சாரக் கட்டணத்தை தெரிந்து கொள்வது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது என்றார்.

Powered by: iSENTIA